# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
# Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),
# District Munsif, Arni.
# O.S.70/2020

2026—ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

D.W.2 சீனிவாசன், வயது 33, த/பெ சோமசுந்தரம்

**குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்திலிருந்து சாட்சி அழைப்பாணை வந்துள்ளதா என்றால் வந்துள்ளது. இவ்வழக்கின் வாதி குப்புசாமியை எனக்கு எத்தனை வருட காலமாக தெரியும் என்றால் சிறு வயதில் இருந்தே தெரியும். வழக்கு சொத்திற்கும், நான் வசிக்கும் வீட்டிற்கும் எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் 7 வீடுகள் இடைவெளியில் உள்ளது. வாதி குப்புசாமி லட்சுமியம்மாள் மற்றும் முத்துசாமியை அடிக்கடி வந்து பராமரிப்பார் என்றால் முத்துசாமி உயிருடன் இருக்கும் காலம் வரை குப்புசாமி கவனித்து வந்தார், அவர் இறந்த பின்னர் சரியாக லட்சுமியம்மாளை பராமரித்து வரவில்லை. மேற்படி விவரம் எனக்கு நன்றாக தெரியுமா என்றால் தெரியும்.

2. குப்புசாமிதான் லட்சுமியம்மாள் வீட்டை புனரமைப்பு செய்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 7 வீடுகள் தள்ளி வசித்து வருகிறேன் என்பதால் குப்புசாமி அடிக்கடி லட்சுமியம்மாள் வீட்டிற்கு வந்து போவது எனக்கு தெரியுமா என்றால் அடிக்கடி வந்து போவார். குப்புசாமி லட்சுமியம்மாள் அக்கா, தம்பி என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் நான் யாருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் பிரதிவாதி கோகுலகிருஷ்ணனுக்காக வந்துள்ளேன்.

3. கோகுலகிருஷ்ணன் சொந்த ஊர் வேலூர் கஷ்பா என்றால் வேலூர் என்று தெரியும். கோகுலகிருஷ்ணன் மனைவி பெயர் புஷ்பா ஆகும், புஷ்பா எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் ஆரணி சைதாப்பேட்டையை சேர்ந்தவர். கோகுலகிருஷ்ணனுக்கும், புஷ்பாவிற்கும் எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் 20 வருடத்திற்கு முன்னர் நடந்தது. திருமணத்திற்கு பின்னர் எத்தனை வருடம் கோகுலகிருஷ்ணன் மற்றும் புஷ்பா வேலூரில்

வசித்து வந்தார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. கோகுலகிருஷ்ணன் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் ஓட்டுநராக பணி புரிந்து வருகிறார். என்ன வாகன ஓட்டுநர் என்றால் ஓட்டுநர் என்றுதான் தெரியும். எத்தனை வருடங்களாக வேலூரில் ஓட்டுநராக இருந்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

4. கோகுலகிருஷ்ணன், அவர் மனைவி மற்றும் பிள்ளைகள் எத்தனை வருடத்திற்கு முன்னர் ஆரணிக்கு குடி வந்தார்கள் என்றால் 8,9 வருடத்திற்கு முன்னர் குடி வந்தார்கள். எங்கு குடி வந்தார்கள் என்றால் எங்கள் தெரு மற்றும் லட்சுமியம்மாள் வீட்டிற்கு பக்கத்து தெருவில் குடி வந்தார்கள். லட்சுமியம்மாள் மற்றும் முத்துசாமியை குப்புசாமி அடிக்கடி வந்து பராமரித்து வந்தார் என்ற விவரம் பக்கத்து தெருவில் இருந்த கோகுலகிருஷ்ணன் மற்றும் அவரது மனைவிக்கு தெரியும் என்றால் சரிதான். லட்சுமியம்மாள் மற்றும் முத்துசாமிக்கு தேவையான உணவு, உடை, மருத்துவம் ஆகியவற்றை பராமரித்து வந்தார் என்ற விவரம் பக்கத்து தெருவில் இருந்த கோகுலகிருஷ்ணன் மற்றும் அவரது மனைவிக்கு தெரியும் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது, அவருக்குதான் தெரியும்.

5. முத்துசாமி எந்த வருடம் இறந்தார் என்றால் 2016ம் வருடம் இறந்தார். முத்துசாமி இறப்பிற்கு குப்புசாமிதான் அனைத்து சவரட்சணைகளும் செய்தார் என்றால் எனக்கு தெரியாது, அந்த சமயம் நான் சபரி மலைக்கு மாலை போட்டிருந்தேன். ஈம சடங்கு, சாவு ஆகியவற்றிற்கு யார் செலவு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது, நான் மாலை போட்டிருந்ததால் வீட்டில் இருந்தேன். முத்துசாமி தான் இறந்த பிறகு தன்னுடைய சாவிற்கு கோகுலகிருஷ்ணன் வரவே கூடாது என்று கூறி இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. ஈம சடங்குகளை அவர்தான் செய்தார் என்று ஊரில் யார் சொல்லியும் கேள்விப்படவில்லையா என்றால் இல்லை.

6. சபரிமலைக்கு சென்று விட்டு வந்த பின்னர் எத்தனை நாட்கள் கழித்து மாலையை கழற்றினேன் என்றால் வந்த அடுத்த நாளே கழற்றி விட்டேன். அதன் பின்னிட்டு யார் ஈம சடங்குகளை செய்தார்கள் என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

எந்த ஆவணத்திற்காக நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் உயில் ஆவணத்திற்காக வந்துள்ளேன். உயில் எப்போது எந்த வருடம், மாதம், தேதி எழுதப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. உயில் ஆவணமான பி.வா.சா.ஆ.3ல் முதல் சாட்சி கையொப்பம் நான்தான் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.3ல் முதல் சாட்சி கையொப்பம் பழனிவேல் போட்டுள்ளார் என்றால் சரிதான். உயிலை கோகுலகிருஷ்ணனுக்கு எழுதி வைத்தவர் யார் என்றால் லட்சுமியம்மாள். உயில் எழுதி வைத்த போது லட்சுமியம்மாளுக்கு என்ன வயதிருக்கும் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

7. 13.09.2019 அன்று கோகுலகிருஷ்ணனுக்கு எழுதி வைத்த உயில் பற்றி லட்சுமியம்மாளுக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் தெரியும். மேற்படி உயிலை எழுதி வைத்த சமயத்தில் லட்சுமியம்மாளுக்கு கண் பார்வை மற்றும் சுய நினைவு இல்லை என்றால் சரியல்ல. மேற்படி உயிலை எழுதும் சமயத்தில் கோகுலகிருஷ்ணன் என்னை சாட்சி கையொப்பம் இட அழைத்தார் என்றால் சரியல்ல, லட்சுமியம்மாள்தான் சாட்சி கையொப்பமிட அழைத்தார். நான் உண்மையை மறைத்து இவ்வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 13.09.2019 அன்று பி.வா.சா.ஆ.3ல் சாட்சி கையெழுத்திட்ட அனைவரும் கோகுலகிருஷ்ணனுக்கு உறவினர்கள் என்றால் சரிதான், லட்சுமியம்மாளுக்கும் தெரியும்.

8. 13.09.2019 அன்று பி.வா.சா.ஆ.2ல் உயிலை ரத்து செய்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும். நாங்கள் சாட்சி கையெழுத்திட்ட அனைவரும் மற்றும் பிரதிவாதி சேர்ந்து பி.வா.சா.ஆ 2 பத்திரத்தை லட்சுமியம்மாளுக்கு தெரியாமல் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. லட்சுமியம்மாள் எந்த தேதியில் இறந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் 4 வருடங்களுக்கு முன்பு இறந்தார்கள், தேதி, மாதம், வருடம் தற்போது நினைவில்லை. லட்சுமியம்மாளுக்கு கண் பார்வை குறைவற்று, எழுந்து நடக்க முடியாமல் இருந்த நிலையில் வாதிக்கு தெரியாமல் மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை ரத்து செய்து பி.வா.சா.ஆ.3 ஐ ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல.

9. லட்சுமியம்மாள் இறந்த பிறகு ஈம சடங்குகளை வாதிதான் செய்தார் என்றால் சரியல்ல, பிரதிவாதிதான் செய்தார். ஈம சடங்கு செய்வதில் பிரச்சினை ஏற்பட்டு வாதி, பிரதிவாதி செய்ய வேண்டாம் என்று முடிவெடுத்து ஊர் மக்களே ஈம சடங்கை செய்தார்கள் என்றால் சரியல்ல, கோகுலகிருஷ்ணன்தான் செய்தார். பிரதிவாதி வாடகை வீட்டில் வசித்து வருவதால் லட்சுமியம்மாளிடம் கெஞ்சி கேட்டு உயிலை எழுதி வாங்கினார் என்றால் சரியல்ல. 2014 முதல் 2020ம் ஆண்டு வரை கோகுலகிருஷ்ணன் மற்றும் அவர் குடும்பத்தார் வாடகை வீட்டில்தான் குடியிருந்தார்கள் என்றால் சரிதான்.

10. பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆகிய இரண்டு ஆவணத்திலும் நான் ஆங்கிலத்தில்தான் கையொப்பமிட்டேன், பழனிவேல்தான் தமிழில் கையொப்பம் செய்தார். குப்புசாமிதான் லட்சுமியம்மாள் மற்றும் முத்துசாமி இறந்த இறப்பு சான்றுகளை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. கோகுலகிருஷ்ணனுக்கு ஆதரவாக உண்மைகளை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi,
District Munsif,
Arni